## பெருநகர சென்னை மாநகராட்சி

## செய்தி வெளியீடு

செ.வெ.எண். 419 நாள்: 25.08.2026

**வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி, கோடம்பாக்கம் மண்டலத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் வளர்ச்சிப் பணிகளை மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., அவர்கள் இன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள மழைநீர் வடிகால்கள், வண்டல் வடிகட்டித் தொட்டிகள், ஏரிகள் மற்றும் குளங்களில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இன்று (25.08.2026) மத்திய வட்டார துணை ஆணையாளர் அவர்கள், கோடம்பாக்கம் மண்டலம், வார்டு-127க்குட்பட்ட தாய்ஷா பூங்கா பகுதி 2ல் உள்ள வண்டல் வடிகட்டித் தொட்டிகளில் இருந்து வண்டகள் அகற்றும் பணி, அப்பகுதியில் உள்ள விருகம்பாக்கம் கால்வாயில் சுற்றுச் சுவர் உயர்த்திக் கட்டும் பணி, காளியம்மன் கோவில் தெருவில் மழைநீர் வடிகால் பணி, அண்ணாநகர் மண்டலம், வார்டு-94க்குட்பட்ட டி.வி.எஸ். கால்வாய், திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு-73க்குட்பட்ட நியூ ஃபெரன்ஸ் சாலையில் உள்ள ஓட்டேரி நல்லா கால்வாய் உள்ளிட்டவற்றைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, தொடர்ந்து கால்வாய்கள் மற்றும் வண்டல் வடிகட்டித் தொட்டிகளை தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளவும், மழைநீர் வடிகால் அமைக்கும் பணி, கால்வாயில் சுற்றுச் சுவர் கட்டும் பணிகளை விரைந்து முடித்திடவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

பின்னர், வார்டு-127க்குட்பட்ட தாய்ஷா பூங்கா பகுதி 2ல் மேற்கொள்ளப்பட்டு வரும் மேம்பாட்டுப் பணி, தாய்ஷா பூங்கா பகுதி 1ல் உள்ள திறந்த வெளி இடம், அண்ணாநகர் மண்டலம், வார்டு-102க்குட்பட்ட கஜலட்சுமி காலனியில் உள்ள பாவேந்தர் பாரதிதாசன் விளையாட்டு மைதானம், கிரசன்ட் சாலையில் உள்ள விளையாட்டு மைதானம் உள்ளிட்டவற்றைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது, மத்திய வட்டார துணை ஆணையாளர் அவர்கள், பூங்காவில் நடைபெற்று வரும் மேம்பாட்டுப் பணிகளை விரைந்து முடித்திடவும், விளையாட்டு மைதானங்களைப் பராமரித்திடவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுகளின்போது, மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**